உதகையில் மண்வள பரிசோதனை ஆய்வுக்கூடம்.

*487. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் மண்வள சோதனை ஆராய்ச்சிக் கூடம் ஒன்று நிறுவப்படவிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

இந்தியா-ஜெர்மனி திட்டத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கென்றே மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்று உதகமண்டலத்தில் உள்ளது. நீலகிரி மாவட்டத்திற்கான மண்வளப் பரிசோதனைப் பணிகளை கோயம்புத்தூரில் உள்ள மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் கவனித்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிப்பு.

*488. வினா—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு 58,900 ஏக்கர்.

திரு. சி. கணேசன் : இந்த ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை மாவட்டத்திலுள்ள சில விவசாயிகள் விரும்புவதில்லை. காரணம் இதை விட விசைத் தெளிப்பான்கள் மூலம் தெளிப்பதுதான் பலன் தருகிறது என்று கருதுகிறார்கள். ஆனால் அரசுத் துறை அதிகாரிகள் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்க வேண்டுமென்று ஆங்காங்குள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கேட்கிறார்கள். அதற்குரிய கட்டணத்தை வசூல் செய்யும்போது அதை விவசாயிகள் எதிர்க்கத் தலைப்படுகிறார்கள். அரசாங்கம் என்ன கருதுகிறது ? ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிப்பது பலன் அளிப்பதாக அரசு கருதுகிறதா ? அதைக் கட்டாயப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை அரசு எந்த ஊராட்சிமன்றத் தலைவர்கள் பேரிலும் அல்லது விவசாயிகள் பேரிலும் கட்டாயமாகத் திணிப்பதில்லை. அப்படித் தெளிப்பதற்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்கள் அனுமதி பெற்று அதற்குப் பிறகு அனுமதி வழங்கிய ஒன்றியங்களில்தான் தெளிக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் விமானம் மூலம் தெளிப்பதன் மூலம் உணவு உற்பத்தி பெருக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு தெரியும். எனவே அந்த வகையில் விமானம் மூலம் தெளிப்பதில் அரசு யாரையும் கட்டாயப்படுத்தாமல் அதை ஒரு முறையாக வைத்திருக்கிறது.

1971 ஜூலை 27]

திரு. கோ. இளங்கோவன்: அரசு இதற்கான தொகையை வசூலிக்க முன் வந்தபோது தஞ்சை வட்டத்திலுள்ள பிள்ளைவாய்க்கால் மிராசுதார்கள் சங்கம் அதைத் தர மறுத்து நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்டுள்ளதா? அப்படியானல் அதன் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: யாரோ ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாக தெரிய வருகிறது. இன்னும் முடிவு தெரியவில்லை எந்த நல்ல காரியங்களுக்கும் நீதிமன்றத்திலே இடைக்கால தடை உத்தரவு கொடுக்கப்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதில் ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது? இந்தச் செலவு பூராவையும் விவசாயி கட்டவேண்டியிருக்கிறதா? அல்லது மானியம் எவ்வளவு சேர்க்கப்படுகிறது? ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது ஊராட்சி மன்றங்கள் இவற்றின் தலைவர்களின் கையெழுத்தை வாங்கிக்கொண்டு கிராமம் பூராவும் அல்லது யூனியன் பூராவும் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளித்து விட்டு கட்டணம் வசூலிக்கிறார்கள். பலர் இதைச் செலுத்த முடியாமல் வேண்டாம் என்று சொல்லக் கூடியவர்களிடமிருந்து கட்டாயப்படுத்தி வசூலிப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் பவர் ஸ்ப்ரேயர்ஸ் வைத்து அடிப்பது இதைவிட நல்லது என்று கருதுகிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசிலிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஒரு ஏக்கருக்கு ஒரு விவசாயியினிடமிருந்து ரூ. 13.64 காசு வசூல் செய்யப்படுகிறது. பூச்சி மருந்து தெளிக்க வாடகை ரூ. 9. அதில் அரசுப் பங்கு ரூ. 4. விவசாயிகள் பங்கு ரூ. 5. மருந்து விலை ரூ. 9.20 அதில் அரசு 15%. அதற்கு உதவித் தொகை கொடுப்பது ரூ. 1.38. பாக்கி ரூ. 7,82, மருந்தின் மேல் விற்பனை வரி 32 காசு, நிர்வாகச் செலவு 50 காசு. ஆக ரூ. 13.64 வசூலிக்கப்படுகிறது. இது தெளிக்கப் பட்ட பிறகும் கூட அந்த நோய்கள் பூரணமாகக் குணமடையவில்லை என்று சொல்கிற விவசாயிகள் தெளிப்பான்கள் மூலம் தெளித்துக்கொண்டு வருகிறார்கள். தனித்தனியாக தெளித்துக்கொள்வார்கள் என்று விட்டுவிட்டால் மற்றவர்கள், அதாவது பூச்சி மருந்து தெளித்து நல்ல முறையில் விவசாயம் செய்பவர்கள் நிலத்திற்கும் அது தெளிக்காத நிலத்திலிருந்து பூச்சிகள் வந்து மேற் சொன்ன விவசாயிகளின் அதாவது மருந்து தெளித்துள்ள விவசாயிகளின் நிலங்களுக்கும் நோய் பரவ ஏது இருப்பதால் பொதுவாகத் தெளிப்பது நல்லமுறை என்று இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருசில விவசாயிகள் இதுகுறித்து குறை சொல்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் சிலர் எதிர்த்தாலும் கூட அங்கு தெளிப்பதை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு நல்ல முறையில் பயன் பட்டதால் இந்த ஆண்டு பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஒருமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. கு. காமாட்சி: சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு பூச்சி மருந்து தெளிக்க ஐந்து ரூபாய் செலவாகிறது. ஆனல் அதே நேரத்தில் விமானம் மூலம் தெளிக்கும்போது ரூ. 13, ரூ. 14 என்று வசூல் செய்யப்படுகிறது.

விமானம் மூலம் தெளிப்பது நல்லதுதான். ஆகவே இந்த ஐந்து ரூபாய் போக பாக்கியுள்ளதை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஐந்து ரூபாய் கட்டணத்தை இப்போது நாம் ஏற்றுக்கொள்வதில்லை. அதற்கு இப்போது நான்கு ரூபாய் கொடுக்கப்படுகிறது. விவாசாயிகள் தனித்தனியாக ஆட்களை வைத்து அவர்களே மருந்து தெளிக்கும்போது ஒரு ஏக்கருக்கு ஐந்து ரூபாய்க்கு மேல் செலவாகிறது. நல்ல விவசாயிகள் நான்கு தடவைகள் கூட தெளிப்பான் மூலம் தெளிப்பது உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன்: விவசாயிகள் விமானம் மூலம் பூச்சி மருந்து அடிப்பது, அந்த விமானம் அரசுக்குச் சொந்தமானதா அல்லது தனியார் துறையைச் சேர்ந்ததா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது தனிப்பட்ட கம்பெனியார் மூலம் தெளிக்கப்பட்டு வருகிறது. தனியாக இந்த ஆண்டுதான், நமது முதல் அமைச்சர் அவர்கள் நமக்கு தனியாக விமானங்கள் வாங்கலாம் என்று இரண்டு விமானங்கள் வாங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அது இந்த ஆண்டு வந்து சேராது. ஆகவே முன்போலவே வாடகை விமானம் மூலம் தெளிக்க உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

திரு. அ. இராசமாணிக்கம்: இந்த விமானம் மூலம் தெளிப்பது பயிர்களில் படுவதில்லை, அவர்கள் ஏதோ ஏமாற்று வேலை செய்கிறார்கள் என்று மக்கள் கருதுகிறார்கள். ஆகவே இதைப் பரிசீலனை செய்து நல்லபடியாக அடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: விமானம் மூலம் மருந்து தெளிக்கும்போது நிலத்தில் அவர்கள் ஆங்காங்கே கொடிகள் நட்டு சரியாக விழுகிறதா என்பதை பரிசோதனை செய்து பார்க்கிறார்கள். அப்படியில்லாவிட்டால் மறுமுறை தெளிக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த மருந்து தெளிக்க வாங்கும் ஹெலிகாப்டர் விமானங்களில் மந்திரிகளும் சுற்றுப்பயணம் செய்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: உறுப்பினர் அவர்கள் விரும்பினால் கொடுக்கிறேன். ஆனால் அந்த விமாம் ‘ஹனுமான்கள்’ போல் இருக்காது, இது ஹெலிகாப்டர் விமானம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கணேசன்: அம்மை நோய் வந்தால் அரசுச் செலவில் அது தடுக்கப்படுகிறது. அதேபோல் காலரா வந்தால் அதுவும் அரசுச் செலவில் அரசாங்க அதிகாரிகள் வந்து நோயைப் போக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுகிறார்கள். அதேபோல் பயிர்களுக்கு வரும் நோயையும் தீர்க்க அரசுத் துறையில் இந்த பூச்சிமருந்துகளைத் தெளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: உயிர்களைக் காப்பாற்ற இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிர்களைக் காப்பாற்றுவதற்கு இப்போது இல்லை.